**20.11.2025**

**MCOP.No.78/2014**
**ம.சா.3 : செல்வராஜ்**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். தேவராஜ் அழைத்ததின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இந்த விபத்து குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் போலீசார் விசாரித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து நான் எந்த நீதிமன்றத்திலும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து குறித்து நான் காவல் துறைக்கோ ஆம்புலன்சிற்கோ தகவல் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) நான் எனது நிருபண வாக்குமூலத்தில் மேற்படி விபத்து எந்த நேரத்தில் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்து நடந்ததாக சொல்லும் இடம் ஆத்தூர் கள்ளக்குறிச்சி போக்குவரத்து நிறைந்த நெடுஞ்சாலை என்றால் சரிதான். மேற்படி விபத்து போலீசார் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் ரோட்டின் நடுவில் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்து சமயத்தில் நான் நெடுஞ்சாலையின் வலது பக்கத்தில் உள்ள பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டு இருந்தேன். அந்த இடத்தில் வாகனம் சென்று கொண்டு இருந்தால் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு தான் வந்தேன்.

3) நான் எனது நிருபண வாக்குமூலத்தில் காரின் ஓட்டுநர் வேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்ததாகவும் மனுதாரர் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாலையை கடப்பதற்காக வரும்போது தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு

காரணம் தைலம்மாள் தான் என்றும் நான் மனுதாரர் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.20 18:00:22 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**